UNSTARRED QUESTIONS.

ரயில்வே இணைப்புச் சாலைகள்

6. கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஹைவேஸ் ரோடுகளுக்கிடையில் இருந்து வரும் ரயில்வே ஃபீடர் ரோடுகள் விவரம் என்ன ?

(இ) பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு இடையே இருந்துவரும் ரயில்வே ஃபீடர் ரோடுகள் விவரமென்ன?

(உ) இத்தகைய ரயில்வே ஃபீடர் ரோடுகளை அடுத்துள்ள ஹைவேஸ் ரோடுகள், பஞ்சாயத்து யூனியன் ரோடுகளின் தரத்திற்குத் தக்கபடி சீராக இல்லை என்ற விவரம் சர்க்கார் அறியுமா ?

பதில்.—(அ) & (இ) கோட்டவாரியாக, ரயில்வே இணைப்புச்சாலைகளின் நீளத்தைக் காட்டும் விவர அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

(a) & (b) A division-wise statement[a] showing the length of railway feeder roads division-wise is placed on the table of the House.

(c) Yes.

Match Co-operative Societies

7. *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) The number of Match Co-operative Societies functioning in the State, District-wise ;

(*b*) the number among them working profitably ;

(*c*) whether it is a fact that there is slump in the trade ;

(*d*) The extent to which it has affected the Match Co-operative Societies ;

(*e*) Will the Government consider the possibility of routing the purchase of match boxes for defence department from the Match Co-operative Societies of our State ; and

(*f*) Will the Government consider starting an apex organisation for regularising and fetching marketing facilities for Match Co-operative Societies of our State ?

A.—(*a*) Chingleput district—One.

Thanjavur district—Two.

North Arcot district—One.

Madurai district—One.

Ramanathapuram district—Six.

Tirunelveli district—Two.

(*b*) Out of the eight Societies which have commenced production one Society is working at a profit.

(*c*) There is no slump in the trade at present.

(*d*) Does not arise.

(*e*) This is under the consideration of Government.

(*f*) When the need for an apex organisation is felt, the proposal of starting one such organisation will be considered.

---

[a] Printed as Appendix XIV on pages 945-946

9th November 1966]

பதில்—(அ) செங்கற்பட்டு மாவட்டம்—ஒன்று.

தஞ்சாவூர் மாவட்டம்—இரண்டு.

வட ஆர்க்காடு மாவட்டம்—ஒன்று.

மதுரை மாவட்டம்—ஒன்று.

இராமநாதபுரம் மாவட்டம்—ஆறு.

திருநெல்வேலி மாவட்டம்—இரண்டு.

(இ) உற்பத்தியைத் துவங்கியுள்ள எட்டுச் சங்கங்களில் ஒன்று லாபத்தில் செயல்பட்டு வருகின்றது.

(உ) தற்பொழுது இந்தத் தொழிலில் மந்த நிலை எதுவுமில்லை.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

(ஐ) இது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

(ஒ) தலைமைச் சங்கம் ஒன்று நிறுவுவது அவசியம் என்று உணரப்பட்டால், அத்தகைய சங்கம் ஒன்றை நிறுவுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை

8. கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லாவாரியாக எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகளில் பதிவு செய்து வேலை பெறுமலிருக்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்களில் 1965–66-ல் பதிவு செய்தவர்கள் எவ்வளவு பேர் ?

(உ) 1965–66-க்கு முன்பே பதிவு செய்து காத்திருப்பவர்கள் எத்தனை பேர் ?

பதில்—(அ) 1966 ஜுன் மாத இறுதியில், இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு வேலை வாய்ப்பு நிறுவனங்களின் பதிவேடுகளில் பதியப்பட்டிருந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை விவரம் வருமாறு :—

வட ஆர்க்காடு	600
தென் ஆர்க்காடு	646
செங்கற்பட்டு	495
கோயம்புத்தூர்	580
கன்னியாகுமரி	1,024
சென்னை	549
மதுரை	1,418
நீலகிரி	384
இராமநாதபுரம்	741
சேலம்	1,525
தஞ்சாவூர்	386
திருச்சிராப்பள்ளி	929
திருநெல்வேலி	1,498
மொத்தம்	10,775

(இ) 1965-ல் 3,310 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொண்டனர், 1966-ம் ஆண்டில் 6,123 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(உ) 1965-க்கு முன்பே 1,342 நபர்கள் பதிவு செய்து கொண்டனர்.

[9th November 1966

A.—(*a*) The total number of trained teachers that remained on the registers of the various Employment Offices in the State at the end of June 1966 is as follows :—

North Arcot	600
South Arcot	646
Chingleput	495
Coimbatore	580
Kanyakumari	1,024
Madras	549
Madurai	1,418
The Nilgiris	384
Ramanathapuram	741
Salem	1,525
Thanjavur	386
Tiruchirappalli	929
Tirunelveli	1 498
Total ..	10,775

(*b*) 3,310 applicants had registered during the year 1965.
6,123 applicants had registered during the year 1966.

(*c*) 1,342 had registered before 1965.

குடும்பக் கட்டுப்பாடு

9. கேள்வி.—திரு. நா. ராஜாங்கம் :
திரு. சி. சிவசுப்பிரமணியன் : } கனம் சுகாதார அமைச்சர்
தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் நம் மாநிலத்தில் 1963-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1965-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி முடிய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் ஆண்கள், பெண்கள் முறையே எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(உ) ஜாதிவாரியாக மாநில மட்டத்தில் எத்தனை பேர், மாவட்டவாரியாக எத்தனை பேர் ?

A.—

(*a*) Medical Department	107,505
Private Medical Institutions	3,153
(*b*) Public Health Department	129,194

	Public Health Department.		Medical Department.	
(1)	Males. (2)	Females. (3)	Males. (4)	Females. (5)
Chingleput ..	663	84	576	123
South Arcot ..	7,143	150	4,571	150
North Arcot ..	6,248	361	5,152	385

9th November 1966]

(1)	Public Health Department. Males. (2)	Public Health Department. Femals. (3)	Medical Department. Males. (4)	Medical Department. Females. (5)
Salem ..	11,471	425	7,727	425
Coimbatore ..	4,594	772	3,747	772
The Nilgiris ..	2,458	180	2,136	172
Thanjavur ..	28,976	472	16,854	472
Tiruchirappalli ..	3,284	365	3,731	335
Madurai	37,010	1,205	15,013	1,207
Ramanathapuram	14,789	172	11,117	168
Tirunelveli ..	12,097	304	11,122	204
Kanyakumari ..	5,688	473	4,339	473
Madras City ..	..	..	14,844	2,710
Total ..	1,24,331	4,863	99,909	7,596
Private Medical Institutions and Railway Hospitals.	1,711	1,442	..	..

(c) These particulars are not collected at the time of operation.

புதிய பஸ் வழிகள்

10. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விபரங்களைச் சபைமுன் வைப்பார்களா ?

(அ) 1965–66-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக எந்தெந்த ரூட்களில் பஸ் விட அனுமதியளிக்கப்பட்டது ?

(இ) ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களை எந்தெந்த ரூட்களில் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன ?

பதில்.—சபைமுன் விவர அறிக்கை ஒன்று a வைக்கப்பட்டுள்ளது ?

A statement a is placed on the Table of the House.

Sago Factory

11. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) Whether there is any proposal to start a giant modern sago factory in Salem district; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) and (*b*) The Government are examining the feasibility of setting up a Central Co-operative Sago Factory at Salem consistingi of the local sago manufacturers as members.

பதில்.—(அ) & (இ) சேலத்தில் உள்ளூர் சவ்வரிசி உற்பத்தியாளர்களைக் கொண்ட மத்தியக் கூட்டுறவு சவ்வரிசி ஆலை ஒன்று நிறுவும் சாத்தியக் கூறு அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

a Printed as Appendix XV on pages 946–950.

[9th November 1966

World Leather Fair

12 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to hold the World Leather Fair in Madras in the earlier part of 1967 ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) (*b*) : The Indian Leather Fair Society is likely to hold a World Leather Fair in Madras in the earlier part of 1967.

பதில்.—(அ) & (இ) இந்திய தோற்கண்காட்சிக் கழகம் 1967–ம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் சென்னையில் உலகத் தோற்பொருட் கண் காட்சி ஒன்றை நடத்தக்கூடும்.

Veterinary College

13. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to establish another Veterinary College in the State ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

பதில்.—(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Children's Theatres

14. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the number and details of Children's Theatres, now existing and those proposed to be opened, in the State ?

A.—There is only one Children's Theatre in the State. It is housed in the New Legislative Assembly Buildings in the Government House Estate, Mount Road, Madras-2. It was inaugurated on 7th December 1957 by the late Pandit Jawaharlal Nehru, Prime Minister of India. The State Government is conducting at the Theatre film shows for children between 4 and 5-30 p.m. on Fridays, Saturdays and Sundays. An additional show is conducted at 2 p.m. on Sundays. On other days documentaries produced by the Films Division of the Government of India are exhibited between 6 and 7-30 p.m. for the public. Admission rate for children's shows and documentary shows is 12 paise per child and 25 paise per adult.

A cultural programme consisting mostly of variety entertainment is offered to children once a month, usually on the last Sunday of the month. The children's. Theatre is primarily made available to children's organisations, children's schools, etc., for conducting shows by children or for children at a concessional rental of Rs. 50 per show.

The Theatre is also rented out to associations not connected with children's activities, and to Government bodies, and other institutions, for their functions and programmes. The Children's Theatre is let out

9th November 1966]

rent-free to Government bodies and to others in suitable and deserving cases. Then a nominal fee of Rs. 20 is levied towards electricity and other incidental charges.

In the case of educational institutions recognised by Government, students associations of such education, Institutions and *bona fide* Film Societies, the Children's Theatre is let out on a concessional rental of Rs. 75. In other cases, a rental of Rs. 150 is levied. All the above rates are as per allotmént.

The Children's Theatre has the following staff :—

Manager	..	1
Cinema Operator	..	1
Reserve Operator	..	1
Booking Clerk	..	1
Typist	..	1
Attendants	..	4

and Menial Staff consisting of Sweeper—1; Scavengers—2 and Watchmen—2.

The Children's Theatre is under the administrative control of the Public (Information and Publicity) Department.

There is no proposal at present to open any more Children's Theatres in the State.

பதில்.—இம்மாநிலத்தில் ஒரே ஒரு பாலர் அரங்கம் மட்டுமே உள்ளது. இது சென்னை-2 மவுண்ட் ரோடு அரசாங்க எஸ்டேட்டில் உள்ள புதுச் சட்ட சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இது காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் 1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ந் தேதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த அரங்கத்தில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4-மணி முதல் 5-30 மணி வரை சிறுவர்களுக்காக நமது மாநில அரசாங்கம் திரைப்படக் காட்சிகள் நடத்தி வருகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு ஒரு காட்சியும் கூடுதலாகக் காண்பிக்கப்படுகின்றது. இந்திய அரசின் செய்திப் படப்பிரிவினால் தயாரிக்கப்படும் செய்திப் படங்கள் மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை பொது மக்களுக்குக் காண்பிக்கப்படு கின்றன. சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சிகளுக்கும் செய்திப் படக் காட்சிகளுக்கும், சிறுவர்களுக்கு 12 காசு வீதமும், பெரியவர்களுக்கு 25 காசு வீதமும் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பெரும்பாலும் கதம்ப நிகழ்ச்சிகளைக் கொண்ட கலை நிகழ்ச்சி மாதத் திற்கு ஒரு முறை, பெரும்பாலும் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை யில் சிறுவர்களுக்கென நடத்தப்படுகின்றது. இந்தப் பாலர் அரங்கம் முக்கியமாக, சிறுவர் நிறுவனங்கள், சிறுவர் பள்ளிகள் முதலியவற்றிற்கு, சிறுவர்களுக்காக அல்லது சிறுர்களால் காட்சிகள் நடத்தப்படுவதற்கென்று காட்சி ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் சலுகையான வாடகைக்கு விடப்படு கின்றது. சிறுவர் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்பில்லாத சங்கங்களுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏனைய நிலையங்களுக்கும்கூட அவற்றின் விழாக்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் இந்த அரங்கம் வாடகைக்கு விடப்படுகின்றது. பாலர் அரங்கம், அரசாங்க நிறுவனங்களுக்கும், ஏற்பும் தகுதியும் பெற்ற ஏனையோர்க்கும் வாடகையின்றி விடப்படுகின்றது. அப்போது, மின்சாரச் செலவு, ஏனைய தொடர்பான செலவுகளுக்காகப் பெய ரளவில் ரூ. 20 மட்டும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

[9th November 1966

அரசாங்கம் அங்கீகரித்துள்ள கல்வி நிறுவனங்களுக்கும், அக்கல்வி நிறுவனங்களின் மாணவர் சங்கங்களுக்கும், திரைப்படச் சங்கங்களுக்கும் குறைந்த வாடகையாக ரூ. 75-க்கு இந்த அரங்கம் வாடகைக்கு விடப்படுகின்றது. மற்றவர்களுக்கு ரூ. 150 வாடகை விதித்து வாங்கப்படுகின்றது. இந்த வாடகை வீதங்கள் அனைத்தும் ஒரு தடவைக்கு உரியவை.

பாலர் அரங்கில் கீழ்க்கண்ட பணியாளர்கள் உள்ளனர் :—

மேலாளர்	1
திரைப்பட இயக்குநர்	1
மாற்று இயக்குநர்	1
நுழைவுச் சீட்டுக் கொடுப்பவர் ..	1
தட்டச்சர்	1
பணியாட்கள்	4

மற்றும் கீழ்க்காணும் குற்றேவலர்களும் வேலையில் உள்ளனர்:—

துப்புரவு ஆள்	1
தோட்டிகள்	2
படிகாரர்கள்	2

பாலர் அரங்கம் பொதுத் (செய்தி—விளம்பர) துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளது.

நமது மாநிலத்தில் மேலும் பாலர் அரங்கங்கள் திறப்பதற்கு இப்போதைக்குச் செயற்குறிப்பு எதுவுமில்லை.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

NON-IMPLEMENTATION OF BONUS ACT FOR WORKERS OF THE NEYVELI LIGNITE CORPORATION.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் வேலை செய்யக்கூடிய 5,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு மத்திய அரசு போட்டிருக்கிற போனஸ் சட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்சம் போனசாக 4 சதவிகிதம் கூட இதுவரை கொடுக்கப்படவில்லை. மைனிங், தர்மல் ப்ளான்ட், பெர்டிலைசர் ப்ளான்ட், கார்பனைசிங் யூனிட் இவையெல்லாம் நல்ல முறையில் நடைபெற்றிருந்தும் அந்த நிர்வாகத்தில் இருக்கிற இந்தக் கம்பெனிகளில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நியாயமான போனஸ் கொடுக்கவில்லை. இதை, இந்த மாநில அரசு இதுவரையில் வாங்கியும் தரவில்லை. ஆகவே, இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிப்பதற்காக இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று என் பிரேரபணையை கொடுத்திருக்கிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு இசைவு தந்து, தங்களுடைய அனுமதியையும் வேண்டுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டிருந்தால் விடை அளித்திருக்கலாம், அல்லது, எனக்கு எழுதினாலும் மேலே கவனம் செலுத்தலாம். இது